1992 ஜனவரி 30]

உடற்பயிற்சி என்கிறபோது, குழந்தைகளுக்கு காராத்தே போன்றவைகளையும் மற்றவைகளையும் சொல்லிக் கொடுக்க முடியாது. பாரதியார் அவர்கள் 'ஓடி விளையாடு பாப்பா, நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா என்று குறிப்பிட்டதைப்போல, குழந்தைகள் காப்பகத்திலே, அந்த குழந்தைகளுக்கு ஓடி விளையாட உடற்பயிற்சி அளிக்க முடியுமே தவிர, இரண்டு வயதிலிருந்து நான்கு வயது வரை இருக்கும் குழந்தைகளுக்கு வேறு உடற்பயிற்சி அளிக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். பி. பரமசிவம்.

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் காப்பகத்தில், அதாவது அரிசன குழந்தைகளும் மற்ற குழந்தைகளும் சேர்ந்து படிக்கின்ற காப்பகத்தில் 70 குழந்தைகளுக்கும், தனித்தனியாக இருக்கின்ற காப்பகத்தில், அதாவது கிராமங்களில் இருக்கின்ற காப்பகத்தில் 50 குழந்தைகளுக்கும், அரிசனக் காலனிகளில் இருக்கின்ற காப்பகத்தில் 70 குழந்தைகளுக்கும் சத்துணவு அளிக்க வேண்டுமென்று இந்த அரசு ஆணையிட்டுள்ளதாக அறிகின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி, அந்தக் குழந்தைகளுக்கு உடற் பயிற்சி அளிப்பது பற்றியது, எண்ணிக்கை பற்றியது அல்ல.

வினா எண் 18, திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

18—

ஊனமுற்றவர்கள் மற்றும் விதவைகளுக்கு வழங்கும் உதவித் தொகையை அதிகரித்தல்.

* 5945—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ஊனமுற்றவர்கள் மற்றும் விதவைகள் ஆகியோருக்கு அரசு வழங்கும் உதவித் தொகையைக் கூடுதலாகக் கொடுப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1992 ஜனவரி 30

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு புரட்சித் தலைவி அரசு மிகப் பெரிய நிதிநிலை நெருக்கடிக்கு இன்றைக்கு ஆளாகி இருக்கின்ற காரணத்தினால் இந்தக் கேள்விக்கு இடமில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக் கொள்கிறேன். நிதி நெருக்கடி இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான். இருந்தாலும்கூட, மாதம் 50 ரூபாய் கொடுப்பது மிகவும் போதவில்லை. அதை 75 ரூபாயாகவாவது உயர்த்த வேண்டும். ஒரு விதவைக்கு 50 ரூபாய், ஒரு ஓல்ட் ஏஜ் பென்ஷனர். அவருக்கும் 50 ரூபாய் என்றால் மிகவும் போதாமல் இருக்கிறது. எனவே, 75 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அடுத்த ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி இடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

4. அறிவிப்புகள்.

(அ) இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவது குறித்து:

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு அஞ்சலி செலுத்துகிற நிகழ்ச்சியாகவும், தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS